ISSN (ONLINE): 3107-7862

# மனநல
## பாதுகாப்புச் சட்டம் 2017

**திரு. மனோஜ் மாயக்கிருஷ்ணன்**, அறம் மனநல மருத்துவமனை, திருச்சி.

**Tamil Psychiatry Journal, Vol-1, Issue-3, Oct-Dec 2025, Page 1-3**

மனநோயாளிகளின் மனநலத்தை மேம்படுத்துவதற்காகவும், அவர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்காகவும், 2017-ஆம் ஆண்டு மனநல பாதுகாப்புச் சட்டம் என்ற புதிய சட்டம் மத்திய அரசால் இயற்றப்பட்டது. இதன்மூலம் மனநல சிகிச்சை அளிக்கக்கூடிய அனைத்து மனநல மருத்துவமனைகள், காப்பகங்கள் மற்றும் மற்ற மனநல சேவை வழங்குபவர்கள் அனைவரும் இச்சட்டதிட்டத்தை பின்பற்ற வேண்டும்.

இச்சட்டம் இயற்றப்படுவதற்கு முன்பாக 1987ம் ஆண்டு இயற்றப்பட்ட மனநல பாதுகாப்புச் சட்டமே பின்பற்றப்பட்டது. ஆனால் இச்சட்டத்தில் மனநோயாளிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் அம்சங்கள் என்று குறிப்பிட்டு எதுவும் சொல்லப்படவில்லை. 2006ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் கூட்டமைப்பு நடத்திய மாநாட்டில் மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகளை பாதுகாக்கபடவேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த தீர்மானத்தை நம் இந்திய அரசாங்கம் அக்டோபர் 2007ம் ஆண்டு கையெழுத்திட்டு ஏற்றுக் கொண்டது. இதனால் தான் ஐக்கிய சபை தீர்மானத்திற்கு ஏற்றவாறு இந்திய அரசாங்கம் புதிய மனநல பாதுகாப்பு சட்டத்தை 2017ம் ஆண்டு பாராளுமன்றத்தில் நிறைவேற்றியது.

மனநோய் என்பது மற்ற உடல்நல பாதிப்பு போல் இல்லாமல் வேறுபட்டு காணப்படும். மன நோயால் பாதிக்கப்பட்டவர்கள் சமூகத்தில் எளிதாக பாதிப்படைவார்கள். இதேபோல் மனநோயாளிகளின் குடும்பத்தினர்களும் பல துன்பங்களுக்கும், இன்னல்களுக்கும் ஆளாகிறார்கள். ஆகையால் மனநோயாளிகளுக்கு பாதுகாப்பான முறையில் சிகிசிச்சை அளிப்பதோடு மட்டுமல்லாமல் அவர்களுக்கு ஏற்ற சூழ்நிலையில் தேவைகளுக்கேற்ப முறையான சிகிச்சைகள் அளிக்க வேண்டும். மேலும் இவர்களை கனிவாகவும், கண்ணியமாகவும் நடத்த வேண்டும். முடிந்தவரை அவர்களுடைய சுதந்திரம் மற்றும் உரிமைகளை பாதுகாக்கும் வகையில் சிகிச்சையின் முறை இருக்க வேண்டும் என்று இச்சட்டம் வலியுறுத்துகிறது. மேலும் ஒவ்வொரு மன நோயாளியையும் எடுத்த உடனேயே உள்நோயாளிகள் பிரிவில் வைத்து சிகிச்சை அளிப்பதைவிட அவர்களுடைய வீட்டு சூழலில் வைத்தே சிகிச்சை அளிக்க முற்பட வேண்டும் என்று இச்சட்டம் வலியுறுத்துகிறது.

**மனநோய் என்றால் என்ன?**

மனநோயால் பாதிக்கப்பட்டவர்களின் பேச்சு, நடவடிக்கை, உணர்ச்சி மற்றும் சிந்தனைகளில் மாற்றங்கள் ஏற்பட்டு அறிகுறிகள் தென்படும். இந்த அறிகுறிகளை **ICD-International Classification of Disease** என்ற புத்தகத்தில் குறிப்பிட்டுள்ள அறிகுறிகளோடு ஒப்பிட்டுப் பார்த்துதான், என்ன வகையான நோய் என்பதை கண்டறிய வேண்டும் என்று இச்சட்டம் வலியுறுத்துகிறது. ஒருவர் இதற்கு முன்பு மனநோய் அறிகுறிகளினால் பாதிக்கப்பட்டிருப்பதை மட்டும் வைத்து, தற்பொழுதும் மனநலத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறார் என்று முடிவு செய்யக்கூடாது. ஒருவர் தவறான பாதையில் செல்வதாலோ அல்லது சமூக பார்வைக்கு தவறான செயல்களில் ஈடுபடுவதனாலோ மனநோய் என்று கருதக்கூடாது. அதேபோல் சமூகம், மதம், ஜாதி போன்ற அமைப்புகளின் எதிர்பார்ப்பிற்கு ஏற்றாற்போல் கட்டுக்கடங்காமல்

இருப்பவர்களை மனநல பாதிக்கப்பட்டவர்களாக நாம் கருதக்கூடாது என்று இச்சட்டம் தெளிவாக எடுத்துரைத்துள்ளது.

**மனநல பாதுகாப்பு சட்டம் 2017-ல் வழங்கியிருக்கும் உரிமைகள்**

**1. மனநல மருத்துவத்தை அணுகுவதற்கான உரிமை:**

மனநோயால் பாதிக்கப்பட்ட நபர் மனநல சிகிச்சையை பெறுவதற்கான உரிமை உள்ளது என்று இச்சட்டத்தில் குறிப்பிடபட்டுள்ளது. ஆகையால் அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் நிறுவனத்தில் மனநல சிகிச்சையை பெற்றுக்கொள்ள ஒவ்வொரு நபருக்கும் உரிமை உண்டு. அவ்வாறு கிடைக்கக்கூடிய மனநல சிகிச்சை முடிந்த அளவு அருகாமையிலும், எளிதாக அணுகக்கூடியதாகவும் இருக்க வேண்டும். குறைந்தபட்சம் ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசாங்கத்தால் நடத்தப்படும் அல்லது அரசு நிதியளிக்கப்படும் மனநலச் சேவைகள் கிடைக்கும் வகையில் உறுதிப்படுத்த வேண்டும். அவ்வாறு மனநலம் பாதிக்கப்பட்ட நபர் வசிக்கும் மாவட்டத்தில் குறைந்தபட்ச மனநலச் சேவைகள் இல்லையென்றால், வேறு மனநலச் சேவையையும் அணுகும்போது சிகிச்சைக்கான செலவுகளை அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**அதாவது:**

- ✧ வெளிநோயாளி மற்றும் உள்நோயாளி சேவைகள் போன்ற மனநல சுகாதார சேவைகளை வழங்குதல்.
- ✧ காப்பகம், தங்குமிடம் போன்ற ஆதரவான நம்பிக்கைக்குரிய இடங்களை வழங்குதல்.
- ✧ மனநலம் பாதிக்கப்பட்ட நபரின் குடும்பத்தை ஆதரிப்பதற்காக மனநல சேவைகளை வழங்குதல்.
- ✧ குழந்தைகளுக்கான மனநல சேவைகள் மற்றும் முதியோர்களுக்கான மனநல சேவைகள்.

என அனைத்து அடிப்படை மனநல ஆரோக்கியத்திற்கான வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுப்பது அரசின் கடமை என்று இச்சட்டம் தெளிவாக எடுத்துரைத்துள்ளது.

**2.சமூக வாழ்வுக்கான உரிமை:**

மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் மீண்டும் சமூகத்திலும் அவர்களது குடும்பங்களிலும் இணைந்து வாழ்வதற்கு ஆதரவளிக்கும் விதத்தில் சிகிச்சை வழங்கப்படவேண்டும். மனநோய்க்கான சிகிச்சைக்காக ஒரு மனநல நிறுவனத்தில் நீண்ட கால பராமரிப்பு தேவைப்படும் சூழ்நிலையில் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். முடிந்தவரை குறுகிய காலத்திற்கு மட்டுமே உள்நோயாளி பராமரிப்பைப் பயன்படுத்த வேண்டும்.

**3.மனிதாபிமானமற்ற மற்றும் தவறான நடத்தையிலிருந்து பாதுகாப்பதற்கான உரிமை:**

மனநலம் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு வழங்கப்படும் சேவைகளின் தரத்தில் எந்தப் பாகுபாடும் இல்லாமல் பொது சுகாதார சிகிச்சைக்கு அளிக்கப்படும் முக்கியத்துவத்தை போன்று வழங்க வேண்டும். மனநலச் சேவைகளின் தரம் மாநில ஆணையத்தால் செய்யப்பட்ட விதிமுறைகளால் குறிப்பிடப்பட்ட வகையில் இருக்க வேண்டும். மனநல சேவைகளின் பாரபட்சம் இல்லாமல், அத்தியாவசிய மருந்துப் பட்டியலில் உள்ள அனைத்து மருந்துகளும் அனைத்து நபர்களுக்கும் இலவசமாகக் கிடைக்க வேண்டும். அவர்கள் அரசாங்கத்தால் நடத்தப்படும் அல்லது நிதியளிக்கப்படும் சுகாதார நிறுவனங்களில் எல்லா நேரங்களிலும் வழங்கப்பட வேண்டும்.

**4.சமத்துவத்திற்கான உரிமை மற்றும் பாகுபாடற்ற தகவல் அறியும் உரிமை:**

மதம், கலாச்சாரம், சாதி, சமூக அரசியல் நம்பிக்கைகள், வர்க்கம், மற்றும் பாலினம் போன்ற எந்தவொரு வேறுபாட்டின் அடிப்படையிலும் பாகுபாடு இல்லாமல் மனநலம்

பாதிக்கப்பட்டவர்கள் மனநல சிகிச்சையை பெறுவதற்கான உரிமையை வழங்கப்பட்டுள்ளது.

**5. இரகசியத்தன்மை, மனநோய் தொடர்பான தகவல்களை வெளியிடுவதில் கட்டுப்பாடு:**

மனநோயாளிகள் மனநல மருத்துவரிடம் தெரிவிக்கும் தங்களைப் பற்றிய தகவல்களை பாதுகாப்பது மனநல மருத்துவரின் கடமையாகும். சில நேரங்களில் அவருக்கோ அல்லது மற்றவர்களுக்கோ ஆபத்தை விளைவிக்க நேரும்போது வேறு வழியின்றி பாதுகாப்பை கருத்தில் கொண்டு நோயாளியின் ரகசியத்தை வெளியே தெரிவிக்கலாம்.

**6.மருத்துவ விபரங்களை அணுகுவதற்கான உரிமை:**

நோயாளிகள் தங்களுடைய நோயின் தன்மைகளைப் பற்றியும், அதன் சிகிச்சையைப் பற்றியும் மருத்துவமனையிடம் கேட்டுத் தெரிந்து கொள்வதற்கான உரிமை வழங்கப்பட்டுள்ளது. இதனால் நோயாளிகளின் விபரங்களையும், அவர்களுடைய ஆவணங்களையும் நோயாளிகளின் வேண்டுகோளுக்கிணங்க அவர்களிடம் மருத்துவமனை மறுக்காமல் கொடுக்க வேண்டும்.

**7.சட்ட உதவி பெறும் உரிமை, சேவைகளை வழங்குவதில் உள்ள குறைபாடுகள் குறித்து புகார் அளிக்கும் உரிமை:**

சில நேரங்களில், நோயாளிகளின் விருப்பத்திற்கு மாறாக அவர்களை மருத்துவமனையில் வைத்து பராமரிக்கும் நிலை ஏற்படும். அவ்வாறு உள்நோயாளி பிரிவில் அனுமதிக்கும் போது சட்டப்பிரிவு எண் 89, 90-ன் கீழ் அனுமதிக்க வேண்டும். அவ்வாறு எடுக்கப்பட்ட முடிவினை எதிர்த்து நோயாளிகள் மாவட்ட மீளாய்வு மையத்திடம் முறையிடலாம். இதுபோன்ற தருணங்களில் அவர்களுக்கு இலவச சட்ட ஆலோசனை பெறுவதற்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது. மேலும் தங்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சையில் குறைபாடுகள் ஏதேனும் இருந்தாலோ அல்லது அவர்களுடைய உரிமைகளை சரியாக கொடுக்கவில்லை என்று நினைத்தாலோ, இவர்கள் மாவட்ட மீளாய்வு மையத்திடம் புகார் அளிக்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறாக மனநல பாதுகாப்புச் சட்டத்தின் உரிமைகளை நன்கு புரிந்து கொண்டு, தெளிவாக விழிப்புணர்வை ஏற்படுத்துவது நமது கடமையாகும்.

## Reference:

https://main.mohfw.gov.in/sites/default/files/Mental%20Healthcare%20Act%2C%202017_0.pdfo